உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவமணி'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 1. } பள்ளத்தூர். பிரமோதூத, ஆவணி. { மணி 8.

இந்தியக் கைத்தொழில்.

இந்தியாவில் இப்பொழுது பல்வேறு கைத்தொழிற் சாலைகளை கூட்டுறவு முறையிலும் சொந்த ஏற்பாட்டிலும் உற்பத்தி செய்து அநேகம் சாமான்கள் தயாராகின்றதென்பதைப் பலரும் கேள்விப்பட்டிருந்தும் அதை நன்கு உணராமலும் ஆதரிக்காமலுமிருப்பதற்கு விளம்பரமின்மையே காரணம். தொழிற்சாலைகள் தங்கள் சக்திக்கு எட்டின அளவு விளம்பரங்கள் செய்துவருகிற போதிலும் அவைமேல் நாட்டுத் தொழிற்சாலைகளின் விளம்பரங்களுடன் ஒப்பிடும் பொழுது இது மிகக் குறை வென்றே ஒப்புக் கொள்ளவேண்டும். மேல்நாடுகளில் தொழிற்சாலைகளை ஒருவரோ பலரோ சேர்ந்து உற்பத்தி செய்யும்பொழுது அதன் மூலதனத்தில் 3-ல் ஒருபாகத்தை அவசியம் விளம்பரச் செலவிற்கென்றே ஒதுக்கிவைப்ப தென்ற முக்கிய கொள்கை இங்கு கவனிக்கற்பாலது. அடுத்துக் கைத்தொழிற் சாலைகளை தனித்த ஹோதாவில் ஒருவர் உற்பத்தி செய்வதைவிடக் கூட்டுறவு முறையில் உற்பத்திசெய்தலே அதன் முன்னேற்றத்திற்கும் விளம்பரத்திற்கும் மிக சௌகரியமாக விருக்கும். நம் நாட்டில் மிகுதியும்

அந்த முறை கைவிடப்படுகிறது. தப்பித்தவறி எங்கேனும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்பட்டாலும் அவை ஒழுங்காக நடைபெறுவதில்லை. அதற்கு முக்கிய காரணம் அந்த ஸ்தாபனங்களைப் பற்றிய விளம்பரமின்மையுந் தவிர கொஞ்சம் பணச்செலவு செய்து நாளடைவிலேயே விளம்பரப்படும் பொழுது பங்காளிகள் ஒற்றுமையின்மையினால் முறிந்துபோகும் ஸ்தானங்கள் சில. அல்லது எடுத்ததும் லாபத்தையே எண்ணி இப்பொழுது செய்துள்ள விளம்பரச்செலவு பின்னர் தகுந்த பலனை எதிர்பார்த்து வித்தியிருக்கும் விதை என்பதை யுணராமல் இதை நஷ்டமாகவே கருதி அதன் ஸ்தாபகர்களையும் மேற்பார்வையாளர்களையும் குறைவுபடுத்துவதால் முறிந்துபோகும் ஸ்தாபனங்கள் சில. இன்னும் பதிவுசெய்யப்பட்டு கூட்டுறவு ஸ்தாபனங்களாக விருக்குமானால் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் மத்தியிலுள்ள கவர்ன்மெண்டு ஊழியர்களின் பழக்கமின்மையினாலும் கூட்டுறவு ஸ்தாபகர்களின் அனுபோக முதிர்ச்சியின்மையினாலும் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள கஷ்டமான (Indian Companies act என்ற) இந்தியா கம்பெனிகளின் சட்டமுறைகளிலும் அதற்குள்ள தண்டனையிலுமுள்ள பயத்தினாலும் அது சம்மந்தமான அநுபோகச் செலவினாலும்பேலெழமுடியாமல் முறியும் தொழிற்சாலைகள் சில. இத்தனை கண்டங்களையும் மீறி நடக்கும் ஸ்தாபனங்களுக்கு வரிப்பழுவோ அல்லது ஆதரிப்புக் குறைவோ இருக்குமானால் அதனாலும் சிரமம் வரலாம். இத்தனையும் ஏற்படாமல் தொழிற்சாலைகள் முன்னேற்றமடையவேண்டும். அதற்குப் பல தொழிற்சாலைகளின் ஸ்தாபகர்களும் நிர்வாகிகளும் ஒன்றுசேர்ந்து அடிக்கடி யோஜனைசெய்து ஒற்றுமைக் குறைவுக்குக்காரணமான ஆணிவேரையையும் பொறாமையையும்முதலில் களையவேண்டும். கூட்டு விளம்பரஸ்தானங்கள் ஏற்படுத்திக்குறைந்த செலவில் கூட்டுவிளம்பரங்கள் செய்யவேண்டும். தொழிற்சாலைகளில் ஒன்றுக்கொன்று உதவியோ அல்லது உதவிபெறும் ஸ்தாபனங்களை உற்பத்திசெய்யவோ வேண்டும். கவர்ன்மெண்டு சட்டங்களைக் கண்டு மலைக்காமலிருக்கவோ அதையறியாமல் ஏற்படும் செலவை தடுத்துக் குறைக்கவோ ஏற்பாடுசெய்யவேண்டும். இத்தனைக்கும் மூலாதாரமாக கூட்டுறவு ஸ்தானபங்களுள் மிக ஒற்று

மை வேண்டும். அது இருந்தால் பல்வேறு முன்னேற்ற முண்டாகும்.

இந்திய தொழிற்சாலைக்காரர்கள் ஒன்றுசேர்ந்து சுதேசித் தொழிற்காக்ஷியோ சுதேசிச் சந்தையோ இந்தியாவிலுள்ள ஒவ்வோர் கிராமத்திலும் கூடுமானால் வெளிநாடுகளிலும் ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். அதற்குத் தொழிற்சாலைகள் நேரடியாகவோ அல்லது கமிஷன் ஏஜண்டுகள் மூலமாகவோ தங்கள் சாமான்களை யனுப்பி இந்தியாவில் இவ்வளவு சாமான்கள் உற்பத்தியாகிறது. இன்ன இன்ன இடங்களில் இந்த சாமான் உற்பத்தியாகிறது என்பதை பொதுஜனங்களறியும்படி செய்யவேண்டும். இவ்விளம்பரமே எல்லாவற்றையும்விட முக்கியவிளம்பரமாகவிருக்கும். இதனால் எவ்வளவு பலன் உண்டென்பதை ஆண்டுகள்தோறும் தேசியக் காக்ஷிசாலைகளையும் சமீபத்தில் சுதேசி லீக் சபையாரால் சென்னை, கல்கத்தா முதலிய தலைநகரங்களிலும் பல்வேறு சிறு நகரங்களிலும் ஏற்படுத்திய சுதேசிக் காக்ஷியையும் வைத்தவர்களும் அதில் கலந்துகொண்டவர்களும் நன்கறிந்திருப்பர். இதைக் கண்டே நம்நாட்டில் இவ்வளவு சாமான்கள் உற்பத்தியாகின்றனவா என்பதை ஜனங்கள் அறிகின்றனர். இப்பொழுது சென்னையில் நடந்த சுதேசிக் காக்ஷியை இப்பகுதியிலிருந்து போய்ப்பார்க்க முடியாதல்லவா? இதேபோன்று தூரதேசங்கள் பலவிருக்கலாம். அதைப்போன்ற காக்ஷியை அநேக இடங்களில் வைத்தாலல்லவோ எல்லா கிராமஜனங்களும் அதை அறியமுடியும். எனவே இந்திய தொழிற்சாலைக்காரர்கள் சாமான்களை உற்பத்திசெய்தல் மட்டும் போதாது. அதை இத்தியாதி முறையில் விளம்பரப்படுத்த உடனே ஏற்பாடுசெய்யவேண்டும். இதில் நாம் முன் கூறியபடி தொழிற்சாலைகள் நேரடியாகக் கலந்துகொள்ளமுடியாதுபோயின் அதில் சம்மந்தம் வைத்துள்ள பிரதிநிதிகளோ அநுதாபங்கொண்டுள்ள சீர்திருத்த சங்கங்களோ கலந்துகொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னும் இந்தியாவில் தொழிற்சாலைகளை உற்பத்திசெய்யவும் அதை முன்னுக்குக் கொண்டுவரவும் முயற்சிசெய்யவேண்டிய வேலை ஒரு முக்கியமானபோதிலும் அதை முழுதும் விர்த்தி செய்யவேண்டியகடமை இந்திய மஹாஜனங்களதேயாகும். அவர்

கள் ஆதரியாதுபோயின் கைத்தொழிலபிவிர்த்தி வாயளவில்தான் நிற்குமே யொழிய செய்கையில் பலியாது. ஏனைய நாட்டை எடுத்துக்கொண்டு அவ்விஷயத்தில் நம் நிலைமையை நோக்கினால் நாம் தலைகுனிய வேண்டியவர்களாகவே இருக்கிறோம். ஒரு ஜப்பானியரைப்பாருங்கள். கைத்தொழிலினாலும் எங்கிருந்தாலும் தங்கள் தேச சாமான்களையே ஆதரிப்பதென்றும் உறுதிப்பாட்டினாலுமல்லவா தங்கள் நாட்டுக் கைத்தொழில்களை முன்னுக்குக் கொண்டுவந்து நாட்டையும் செல்வநாடாக்கிவிட்டார்கள். தங்கள் நாட்டுச் சாமான் என்ன விலையாகவிருந்தாலும் தனக்குவேண்டிய சாமான் தன் நாட்டில் உற்பத்தியாகி அது எவ்வளவு அழகற்றதாகவிருந்தாலும் அதையே தான் வாங்குவதென்ற விரதமல்லவா அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதேவழக்கந்தான் கைத்தொழில் முன்னேற்றமடைந்துள்ள ஒவ்வோர் நாட்டிலுமிருந்திருக்கும்.

நாமோ! நமது சாமான் நன்றாகயில்லை என்கிறோம். விலை அதிக மென்கிறோம். நன்றாகவும் குறைந்தவிலையிலும் உடனே எவ்வாறுகிடைக்கும் நமதுசாமான்களை அதிகமாக ஆதரித்து வாங்கினால் நாளாகவாக சாமான் நயமும் விர்த்திக்குத் தகுந்தவாறு விலைகுறைவும் உண்டாகும். அதனால் முதலில் கொஞ்சம் விலைகூட இருந்தாலும் சாமான் பார்வைக்கு அழகில்லாமலிருந்தாலும் இந்திய நாட்டவர் இந்திய சாமான்களையே வாங்கவேண்டும்.

நம் நாட்டில் ஆகாரத்திற்கு வேண்டிய ரொட்டி, மிட்டாய், மாவு வகையறாவும் ஜரிகை, பட்டும் எல்லாவகை உடை, பள்ளிச் சிறுவர்களுக்கு வேண்டியதான சிலேட்டு பென்சில், சிலேட்டு, பேனா, பென்சில், ஸ்டீல், வருணப் பெட்டிகள், மை, பேப்பர் வகையறாக்களும் மனிதர்களுக்கு வேண்டிய நடையன், பூட்ஸ், ஸிலிப்பர், குடை, கண்ணாடி சாமான்களும் வீட்டிற்கு வேண்டிய நெருப்புப்பெட்டி, லைட், கிளாஸ்கள், எல்லாவகையான தளவாடச் சாமான்களும் அழகுசெய்யவேண்டிய சாமான்களும் வீடுகட்டுதற்குறியசாமான்களும், சோப்பு, சீப்பு, தைலவகை யாவும் இந்தியாவிலேயே மிக உயர்ந்த உயர்ந்த முறையில் தயாராகின்றன. மருந்துகளுங்கூட ஆங்கில முறையில் அநேகம் இந்தியத் தொழிற்சாலைகள் தயார்செய்கின்றன. இவையாவும் நமது நாட்டுச் சாமான்களே நமக்குக்கிடைக்கும்பொழுது இவைஎல்லாம் வெளி

நாட்டினுமிருந்தும் இறக்குமதிசெய்யப்பட்டு நமது சாமான்களை மூலையில்வைத்து அழகாக இருக்கிறதென்ற காரணத்திற்காக வெளிநாட்டுச் சாமான்களையே வாங்குவோமேயானால் என்று நம்நாட்டுச்சாமான் அழகிற்குவரும். இனியேனும் கிராமந்தோறும் சுதேசிப் பொருட்காக்ஷி ஏற்பாடுசெய்து இந்தியசாமான்களையே கட்டாயம் இந்தியர் ஆதரிப்பதென்று உறுதிகொள்ளும்படி இந்திய மஹாஜனங்களை வேண்டிக்கொள்ளுவதோடு அதேபோன்று இந்தியக் கைத்தொழிற்சாலைகளும் தகுந்த விளம்பரஞ்செய்யவும் தங்கள் சாமான்கள் எங்கும் கிடைக்கவும் ஏற்பாடுசெய்ய உடனே முயற்சிசெய்வார்களெனவும் எதிர்பார்க்கிறோம்.

மணியொளி.

வருக! வருக!!

மஹாத்மாஜீயின் சபர்மதி ஆச்ரமத்தின் தற்கால நிர்வாகியும் கதர் அபிவிர்த்தியில் பூரணகவனத்தைச் செலுத்தி வருபவரும் மஹாத்மாவின் சிஷ்யர்களில் ஒருவருமான மிஸஸ்ஸ்லேட் என்ற அமெரிக்க மாதான மீராபாய் சென்னை வந்துள்ளார்கள். அவர்கள் இந்தியாவெங்கும் சுற்றுப்பிரயாணஞ்செய்துவருவதாகத் தெரிகிறது. அதன் நோக்கம் கதர் அபிவிர்த்தியில் வேண்டிய சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி அன்பர்களைத் தூண்டுவதொன்றுதான். எனவே, இந்தியப் பணிபூண்டுவரும் எந்தாய் வருக! வருக!! இவர்களின் வரவு நல்வரவாகுக!!! எண்ணிய வேலை திண்ணமாய் ஜயம்பெறுக!

கனம் சாஸ்திரியார்.

மகாகனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் தற்பொழுது லண்டனில் வசித்துவருகிறாரென்பது யாவருமறிந்ததே. அவர் லண்டனில் பல்வேறு சங்கங்களாலும் கூட்டங்களாலும் கொள்கையாளர்களாலும் நன்கு வரவேற்கப்பட்டு உபசரிக்கப்படுகின்றார். அவர் தனக்குச் சமயங்கிடைத்த பொழுதெல்லாம் ஒன்றையும்

வீணுக்காமலும் கைநழுவவிடமலும் இந்திய நிலைமையை உள்ளது உள்ளவாறு மிக தைரியமாக எடுத்துரைத்துவரும் ஒன்றைக் கண்டவுடனேயே இது இந்தியாவிற்கு ஓர் நல்லகாலந்தான் என்பது தெற்றென விளங்கச் செய்கிறது. அவர் எப்பொழுதும் நம்மிடம் சண்டைசெய்தபோதிலும் சமயம் நேர்ந்தபொழுது விட்டுக் கொடுக்கும் சுபாவமுடையவரில்லை என்பதை நாம் புதிதாகச் சொல்லவேண்டுவதில்லை. தற்பொழுதைய இராஜிப்பேச்சுக்கூட அன்னவர்போன்றவர்களின் திறமையான, அஞ்சாத, ஒப்பற்ற பிரசாரத்தால் தான் ஏற்பட்டதென்பதற்கு ஐயமில்லை. அன்னவரின் பிரசாரம் மேல்நாட்டில் நம்மைப்பற்றி நல்லெண்ணத்தைக் கொடுக்குமென நம்புகிறோம்.

மலேயாவில் இந்தியர்.

மலேயாவில் தொழில் நிலை மிகவும் சீர்கெட்டுவிட்டது. ரப்பார் விலை மிகக் குறைந்துவிட்டது. நாணயமாற்று சரியில்லை. சீக்கிரத்தில் நிலைமை மாறுமென்று எண்ணுவதற்கிடமில்லை. வெளிநாடுகளில் ஏராளமான ரப்பர்கள் ஸ்டாக்கிலிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையில் கடன்வாங்கி வேலைசெய்த அநேகம் இந்தியர்களின் தொழில்கள் அறவே கெட்டுவிட்டன. ஏழை இந்தியக் கூலிகளுக்கு ஏற்கனவே அநேகம் குறைகளும் சம்பளம் போதாத நிலைமையும் இருந்தது. இப்பொழுது அவை இன்னும் பெரிதாகிவிட்டன. ஏற்கனவே இருந்தசம்பளத்தையும் இப்பொழுது குறைத்துவிட்டார்கள். இன்னும் அநேக சௌகர்யங்கள் குறைகின்றன. இதனால் மலேயாவிலுள்ள இந்தியர்களின் நிலை மிகவும் கஷ்டத்திற்கு இடந்தரக்கூடியதாக விருக்கிறது. அநேகர் தொழிலை நிறுத்தித் தாய்நாடு திரும்புகின்றனர். இந்நிலை மாறி சமரசமான ஓர் காலம் எப்பொழுது வருமெனத் திட்டமாகத் கூறவும் கூடவில்லை.

24 மில்கள் மூடப்பட்டன.

தற்கால இந்திய தேச நிலைமையில் வியாபாரம் ஸ்தம்பித்துவிட்டபடியால் வியாபாரமில்லாமல் ஸ்டாக்குகள் குவிந்துவிட்டதை யுத்தேசித்து பம்பாயில் சாசூன் கோஷ்டியைச் சேர்ந்த 10 மில்களும் இன்னும் பல கோஷ்டியைச் சேர்ந்த 14 மில்களும் ஆக 24 மில்கள் மூடப்பட்டதாகத் தெரிகிறது. இதில் எழுபதுனாயிரம் பேருக்கு மேற்பட்ட தொழிலாளர் வேலையற்றிருக்கின்றனராம்.

அத்துடன்லே கோஷ்டியைச் சேர்ந்த 3 மில்களும் இம்மாதிரியே செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. கரீம்பாய் கோஷ்டியைச் சேர்ந்த 14 மில்கள் சொற்பத்தறிகளில் மட்டும் வேலைசெய்து வருவதாகத் தெரிகிறது. இவை யாவும் இந்திய சமாதானத்தின் பின்னரே சரியான நிலையை அடையமுடியும்.

ஏழேமுக்கா லக்ஷம்.

பம்பாய் சட்டசபையில் ஜூலை மத்தியில் நடந்த கூட்டத்தில் விசாபூரிலும் எர்வாடாவிலும் தற்காலமாக புதுஜயில் கட்டடங்களை யமைக்க ரூபாய் ஒரு லக்ஷத்து எழுபதுஆயிரமும்சட்டமறுப்பு இயக்கத்தில் சிறைச்சாலைகளில் ஏற்படும் அதிகச் செலவிற்கு ரூபாய் ஆறுலக்ஷத்துப் பதினையாயிரமும் உபமான்யமாக அனுமதிக்கவேண்டுமென்ற கோரிக்கை நிறைவேறியது. இது இந்தியாவின் பணம் செலவழியும் பலவழிகளில் ஒன்று.

எல்லைப்புரச் சண்டை.

மீண்டும் நமது இந்தியாவின் ஓர் எல்லையான பெஷ்வாரில் சில இடங்களிலும் சண்டை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இச்சண்டை ஆப்ரிதிகளால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது மூன்றாவது கிளர்ச்சியாகும் இதில் சம்பந்தப்பட்ட ஆப்ரிதிகள் பெஷாவார் ராணுவடிப்போவையே தாக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதனால் அப்பகுதிகளிலுள்ள ஸ்திரிகளும் குழந்தைகளும் வெளியேற்றப்படுகின்றனராம். நம்மை அடுத்து நமது நாட்டின் எல்லைப்புறமான பெஷாவாரில் இங்ஙனம் அடிக்கடி கலகங்களும் சண்டையும் ஏற்பட ஏதோ ஓர் மாயமான கூட்டம் இருந்தே வருவதாகத் தெரிகிறது. இதை நாம் நன்கு அறியமுடியாததன் காரணம் யாதோ?

விநோத உத்திரவு.

பூனாவிலுள்ள துருப்புகளின் தளகர்த்தாரன லெப்டினெண்ட் கர்னல் டபிள்யூ. பி. பெண்டன் என்பார் தண்டுப்பிரதேசத்திலுள்ள இரண்டு பெரிய வியாபாரிகளுக்கு ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார். இது வியாபாரிகளிடையே பலத்த பரபரப்பை யுண்டு செய்திருக்கிறது. அவ்வூரில் 24 வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து

ஆகஸ்ட் 10-உ முதல் ஒரு மாதம் ஹர்த்தால் அனுஷ்டிப்பதென முடிவுசெய்து அதை செயலில் காட்டிவிட்டனர். இதை ஆக்ஷேபித்து அவ் உத்தியோகஸ்தர் நீங்கள் எங்கள் துருப்புகளுக்குத் துணிகொடுக்க மறுத்தும் ஒருமாதகாலம் கடையடைப்பை நீடிக்கச் செய்வதாயும் தீர்மானஞ்செய்திருப்பதுடன் ராஜத்துரோகத் துண்டுப்பிரசுரங்களை உங்கள் கடைகளில் ஒட்டியுமுள்ளீர்கள் என அறிகிறேன். ஆகையால் 1924-வது வருடச்சட்டம் 238-வது பிரிவுப்படி என்னால் பிறப்பிவிக்கப்பட்டிருக்கும் இந்த நோட்டீஸ் கிடைத்த 36-மணிநேரத்திற்குள் தண்டியிலிருந்து வெளியேபோகும்படி தங்களைக்கேட்கக்கூடாதென்பதற்கும்என துஎழுத்துமூலமான மறு உத்தரவு கிடைக்கும்வரை தண்டுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று ஏன்நான் உத்தரவிடக்கூடாதென்பதற்கும் காரணங்கள் காட்டும்படி நான் தங்களை அழைக்கிறேன். என்று நோட்டீஸ் பிரப்பித்திருக்கிறார் இதன் சாரத்தையும் இந்த உத்தரவின் போக்கையும் பார்க்கும்பொழுது இது ஓர் பெரும் வேடிக்கை உத்தரவாகவே இருக்கிறது.

சர்வகக்ஷி மஹாநாடு.

முன்னர் குறித்தகாலத்திலேயே சர்வகக்ஷி மஹாநாட்டை லண்டனில் நடத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. அதற்கென இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் பலர் பிரயாண ஆயத்தஞ்செய்துவிட்டனர். சிலர் பிரயாணப்பட்டும்விட்டனர். மத்தியில் காலத்தை மாற்றிவைப்பார்களென்று உலவிய வதந்திகள் யாவும் பொய்யாயின. இம்மஹாநாடு ஓர் அரிய சந்தர்ப்பம். இராஜிப்பேச்சு முறிந்துபோனாலுங்கூட இம்மஹாநாடு சரியாக நடந்தால் இந்திய ஜனங்களைத் திருப்திப்படுத்துவதற்கு அது ஓர் உபகரணமாக விருக்குமென பிகானீர் மஹாராஜாபோன்றவர்கள் அறிவிக்கின்றனர். எப்படி இருந்தபோதிலும் யாவரும் ஒப்புக்கொள்ளும் தேசிய மஹாசபையின் பிரதிநிதிகள் அங்கில்லையேல் சந்திரனில்லாவானம் போலிருக்குமேயல்லாமல் அச்சபை அவ்வளவு திருப்திகரமாக விருக்காது. எனவே, இப்பொழுதைய ராஜிப்பேச்சு முறிந்துபோயினும் மீண்டும் தேசியசபையாரை அம்மஹாநாட்டில் கலக்கச்செய்ய முயற்சித்துப்பார்ப்பதே நலமாகவிருக்கும்.

சிறுவர்களின் கல்வி.

ஸ்ரீமான். பாதம்சந்த் சலீம்வாலா
இந்து வாலிபர் சங்கக்காரியதரிசி, டில்லி.

(நமது மொழிபெயர்ப்பு.)

தொடங்கும்போதே ஓர் காரியத்தை, திடமான மனதுடனும் நேர்மையான முறையுடனும் ஆரம்பிக்க சங்கல்பம் செய்து கொண்டோமாயின், அக்ஷணமே அவ்விஷயம் பாதி வெற்றியுடன் தொடங்கப்பட்டதென்றே கூறலாம். எப்போது வெற்றி இவ்வளவு சீக்கிரத்திற் கைக்குக் கிட்டிவிட்டதோ, அப்போதே முழுவெற்றியும் அடைந்து தீருவோமென்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. எக்காரியத்தையும் சலிப்பின்றி, நேரிய பாதையில் ஆரம்பித்துவிடுங்கள். வெற்றியுந் தோல்வியும் நமது கரத்திலில்லை. செய்ய வேண்டிய பொறுப்புமாத்திரம் நம்முடையது. அதன் பலாபலன்கள் கடவுளுடைய சம்மதமேயாகும். இந்திய சிறுவர்களின் கல்வி விஷயத்திலும் இதனையே திடமாகக் கூறுவேன். அவர்களுடைய கல்விப்போக்கு, முறையாவும் உடனே மாற்றப்படவேண்டும். அங்ஙனம் மாறுதல் நேரிடும்போது, அதனால் விளையக்கூடியபலாபலன் நன்மைகளைக் கொண்டிருக்கவேண்டு மென்பது மாத்திரம் நமது லக்ஷியமாயிருத்தல் அவசியம். இதற்காக இன்று, நாளை, அடுத்த வருடம் எனக் காலந்தாழ்த்திக்கொண்டுபோவது கல்வி உலகில் மிக்க அபாயகரமான நிலைமையை உண்டாக்குமென்றே கூறலாம். எதிர்காலத்தில் நமது தேசத்தின் வஜ்ரதூண்களாகவும், தேசத்தின் நிலைமையைப் பாதுகாக்கும் மனிதர்களாகவும் வரக்கூடிய, நமது இன்றைய இளைஞர்கள், அறிவுலகில் பிரகாசிக்கவேண்டியது அவசியமாயின், அதற்காக இடப்படவேண்டிய அஸ்திவாரம் தகுந்த கொள்கைகளை உடையதாயிருக்கவேண்டு மென்பதை யாரே மறுக்கவல்லார்?

இப்போதைய கல்விமுறை.

இப்போதைய கல்விமுறையை எடுத்துக்கொள்வோமாயின் பரிதாபகரமாயிருக்கின்றது. கல்வியென வரும்போது, பலவித முறைகளைப்பற்றி கூறலாமென்றாலும், நாம் அத்யாவசியமாய்க் கவனிக்கவேண்டியது சாதாரணமாய் நடைபெறும் ஆரம்பக் கல்வியையே. ஆரம்பக்கல்வி யெனில் பிரைமெரி, அதாவது ஐந்தாவது வகுப்புவரைமாத்திரம் என்று வைத்துக்கொள்ளுவோம். இதற்கு மேற்பட்ட கல்வித்துறைகளைப் பற்றிசண்டு சர்ச்சைசெய்வதைப்பார்க்கிலும் அதனைத் தனி அத்யாயமாக எடுத்துக்கொண்டு பரிசிலனைசெய்வதே நன்று. இப்போதுள்ள ஆரம்பக் கல்விமுறையின் சீர்கேடான பல நிலைமைகளைக் கண்கூடாகக் கண்டே கோபாலகிருஷ்ண கோக்லே பெருமானார் இப்போதைய முறை உடனே மாற்றப்படுவது மாத்திரமன்றி, நாடெங்கணும் இக்கல்வி கட்டாயமாய்ப் போதிக்கப்படக்கூடியவாறு சட்டமும் செய்துவிடவேண்டும் எனக் கூறினார்கள். அவருக்குப் பின்பும் எத்தனையோ பெரியோர்கள் இவைகளை அடிக்கடி எடுத்துக் கூறியபோதிலும் கவர்ன்மெண்டார் யாருக்குவந்தவிருந்தோ வென பாராமுகமாயிருப்பது தாங்கொணா ஆச்சரியமும் விசனமுமாகவிருக்கின்றது. குழந்தைகளின் மனம் பண்படவேண்டியதெல்லாம், ஆரம்பத்தில் இக்கல்வியிலுள் அடங்கியிருப்பதால், இப்போதைய கல்விமுறையைச் சரியனபடி சீர்தூக்கிப்பார்க்கவேண்டும். சொல்வதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள்போல், பாடங்களைப் பார்த்து ஒரே இராகத்துடன் வாசித்துவிடுவதும் இப்பாடங்களால் வரக்கூடிய நன்மை தீமைகளை அறியாமலிருந்துவிடுவதும், எதோ வருடத்துக்கொருவகுப்பு உயர்ந்தாற் போதுமென்று உபாத்தியாயர்களும் அஜாக்ரதையாக விட்டுவிடுவதும், பொறுப்புள்ள ஜனத் தலைவர்களின் கவனத்துக்குக்கொண்டுவரப் படவேண்டியவைகளாகும். இவ்வித கல்விமுறையினாலேயே குழந்தைகள், மாணவர்கள் நிலையை யடைந்து, பாடசாலையை விட்டதும் பெரும்பாலோர் குமஸ்தாவேலைக்குத் தாளம்போடக் கூடிய நிலைமைக்கு வந்துவிடுகின்றனர். அவர்களது புத்தி தீக்ஷண்யப்படவேண்டியதற்குப் பதிலாக மழுங்கிவிடுகின்றது. அறிவைப்பற்றி அவர்கட்குக் கவலையே இல்லை. ஏதோ பத்தாம்

வகுப்பு வாசித்துவிட்டோம். எங்கேயானாலும் ஓர் குமஸ்தா உத்யோகம் போதும் என்னுந் திருப்தியுடையவர்களாக, அறிவுலகைப் பாழ்படுத்திவிடுகின்றார்கள். இதற்கு முக்கியகாரணம், இவர்களது கல்வியின் அஸ்திவாரத்துக்கு ஆதாரமாயுள்ள ஆரம்பக் கல்வியின் சீர்கேடேயாகும்.

ஓர் பார்வை,

நான் இவ்வளவு அழுத்தமாய்க் கூறுவது ஓர் வேளை, சிலருக்குப் பிடித்தமில்லாமலிருக்கலாம். என்றாலும் நான் கூறுவன தகுந்த ஆதாரங்களுடன் உள்ளவைகளாகும். உதாரணமாக யாராவது ஒருவர், ஆரம்பக்கல்லூரிகளைப் போய்ப்பாருங்கள். நீங்கள் ஆங்கு காண்பது கல்விக் காட்சியாயின்றி, கோரக்காட்சியாகவே இருக்கும். சிறு சிறு அறைகளாகத் தடுக்கப்பட்ட இடங்களில், ஓர் சில பெஞ்சுகளில் மாணவர்கள் உட்கார்ந்திருப்பதும், பெருங்குரலெடுத்ததேபோன்று, தவளைகள் மழைகாலங்களில் கரைவதுபோன்று, சப்திப்பதும் இவர்களது உபாத்திமார்கள், ஏதோ தாங்கள் சம்பளத்திற்காகவும், கடமைக்காகவும் சலிப்புடன் உழைக்கும் முகங்களுடன் விளங்குவதும் தெரியவரும். பிள்ளைகள் சொல்வதில் அறிவான உணர்ச்சிக்கு வழிகளிருக்கின்றனவா? குழந்தைகள் சொல்வதைக் கிரகிக்கின்றார்களா? அல்லது இம்மட்டுடன் வீண் கூப்பாடுதான் போடுகின்றார்களா? என்று எந்த உபாத்தியாயரும் கவனிக்கிறதாகக் கூறமுடியாது. மாணவர்கள் போடுகிற சப்தம் ஒன்றுபோல் தொனிக்கின்றதாவென்பதிலேயே அவர்களது முழுக்கவனமும் சென்றுவிடுகின்றது. இன்றேல், மாணவர்கட்கு விழும் உதைகளும் சில சமயங்களில் அதிகமாகிவிடும். ஓர் வேளை இப்போது சில பாடசாலைகளில் இத்தகைய கூச்சல்கள் அடங்கியிருக்கிறதாக ஒப்புக்கொண்டாலும், கல்விமுறை சற்றேனும் மாறுதலடையாமலிருக்கின்றதென்பது யாரும் மறுக்கவேமுடியாது. இங்ஙனம் மோசமான நிலையிலிருக்கின்றதென்பதை, நான்மாத்திரம் உணர்ந்து எழுதுகிறேனென எண்ணவேண்டாம். யாவருடையமனதிலும், விசேஷமாய் கல்வி அதிகாரிகளுடைய கவனத்திலும் இவ்விஷயம் இடம்பெற்றிருக்கின்றது. ஆனாலும் அதற்காக முயற்சி எடுப்போர்மாத்திரம் அபூர்வமாகவே இருக்கின்றனர்.

ஆக செய்யவேண்டியதென்ன?

இதைப்பற்றி பேர்பெற்ற சரித்திராசிரியரும், நாவலாசிரியருமான மிஸ்டர். பாரியங்கவுல்டு நன்ருய்க் கூறியிருக்கிருர். சமீபத்தில் இந்தியாவிற் பிரயாணஞ்செய்து சுதேசம் சென்றவர். இந்தியாவிலுள்ள "புத்தகபடிப்பு" முறையை வெகு அழுத்தமாய்க் கண்டித்திருக்கின்ருர். அவர் மேலும் தனது அநுபவத்திலுள்ள ஓர் விஷயத்தை எடுத்துக்கூறியிருப்பது யாவரும் கவனிக்கத்தக்கதாகும். இவர் டார்டு மூரில் வாசிக்கும்போது கல்வி அதிகாரி பரிட்சைக்காக வந்தார். முதலாவதாக அதிகாரி மாணவர்கட்குக் கேட்ட கேள்விகள் யாவும் அறிவை அடிப்படையாய்க் கொண்டிருக்கவில்லை. சைபேரியாவில் உள்ள ஆறுகளின் பெயர்களையும், ஆசியாக்கண்டத்திலுள்ள உந்நதமான மலைச் சிகரங்களையும் கூறும்படி கேட்கவே, மாணவர்கள் இவைகளை மனப்பாடம் செய்துவைத்திருந்ததால் அப்படியே ஒப்புவித்துவிட்டனர். ஆனல் பொது அறிவுக்குறிய கேள்விகள் வரும்போது மாணவர்கள் ஏதுவுமே கூறுவதற்கின்றித் திகைத்துவிட்டனர். இப்போது தான் இன்ஸ்பெக்டருக்கும் விஷயம் இன்னதெனத் தெரியும்படியாயிற்று. பின்னர் இவரே இங்கிலாந்தில் கல்விமுறை மாற்றி யமைக்கப்பட வேண்டுமெனப் பெருங்கிளர்ச்சிசெய்து வெற்றியடைந்தார். இதேமாதிரியான உணர்ச்சியே இப்போது நம்மிடையிலேயும் தோன்றப்பட வேண்டும்.

இதற்குச் சரியானவழி,

எதையும் கவர்ன்மெண்டாரே செய்யட்டும் என வாளாவிருந்துவிடலாகாது. கவர்ன்மெண்டார் எப்போதுமே, ஜனங்களுடைய தூண்டுதலின்மீதும், கிளர்ச்சியின்மேலும் காரியங்களைச் செய்கின்றவர்களே யன்றி, தாங்களாகவே இவ்விஷயத்தில் தலையிட்டு உழைப்பார்களென எதிர்பார்க்கமுடியாது. ஆக, செய்யவேண்டிய பொறுப்பு நம் ஜனங்களைச் சார்ந்ததேயாகும். மாணவர்களின் கல்வியை, இன்பத்துடன் கூடிய அறிவு, ஆற்றல் என்னும் சாதனங்களோடு இணைத்துவிடுவோமாயின் அதுவே போதுமானதாகும். கல்வியானது ஒழுக்கம், உண்மை, அறிவு, பரோபகாரம், கருணை ஆகியவைகட்கு இருப்பிடமா யிருக்கக்கூடியவாறு செய்து

விடுவோமாயின் எதிர்கால இந்தியாவின் நிலைமையே வேறாகிவிடு மன்றோ? எனவே, இந்தியாவிலுள்ள ஜனத் தலைவர்கள் இவ்வொரு விஷயத்திலேனும் கட்சி, மத வேற்றுமைகளை மறந்து ஒன்றுகூடி ஓர் புதிய முறையைக் கண்டுபிடித்து அதனைச் சர்க்காருக்குச் சமர்ப்பிக்கலாம். இவ்வளவையும் செய்துவிட்டால் மாத்திரம் போதாது. ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை சரியான முறையில் அமைக்கப்படவேண்டும். அவர்கட்கு இப்போது கொடுக்கப்படும் உரிமைகளோ, சம்பளமோ போதாமல் பிணி, சஞ்சலம் ஆகியவைகட்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள். இத்தகையவர்கள் நம் பிள்ளைகளின் அறிவை அதிகரித்துவிடுவார்களென்று எண்ணுவது எவ்வளவோ மதியீனமாகும்.

சென்றன செல்க! இனி!!

சென்றன செல்க: இனிச் செய்யவேண்டியதென்ன? நான் கூறும் இவ்விஷயங்கள் இந்தியாவிலுள்ள எல்லாச் சமூகத்தினரையும் பொறுத்ததேயாகும். அந்தந்த மாகாணங்கட்குத் தக்கபடி ஓர் சில முறைகள், கல்வியில் மாற்றப்படவேண்டியிருக்கலாம். என்றாலும் ஆரம்பக்கல்வி முறையானது இந்தியாவிலுள்ள யாவருக்கும் பொதுவான நிலையிலேயே இருக்கவேண்டும். இவ்வுணர்ச்சி யாண்டும் நிலவுவது உண்மையே. அஃது ஓர் உருவகமாகி நம் தேசத்திற்குப் புதிய வழியும், புதிய சக்தியும் திறக்கப்படவேண்டுமென்று விரும்புகிறேன்.

இப்புத்தகங்கள் வேண்டுமா ?

ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபது பாடியவரலாறு	புத்தகம் 1-க்கு	ரூ	0—2—0
இரட்டைப் புலவர் சரிதம்	புத்தகம் 1-க்கு	ரூ	0—6—0
எனது நெடுங் கனவு	புத்தகம் 1-க்கு	ரூ	0—6—0
தமிழன்	புத்தகம் 1-க்கு	ரூ	0—6—0

வேண்டுமானால் எங்களிடம் கிடைக்கும்.

மானேஜர், 'நவமணி' பத்திரிகாலயம், பள்ளத்தூர்.

ஆந்திர நாடு.

லேபாக்ஷி ஸ்தலம்.

கோவை—திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் எழுதுவது.

அனந்தபுரம் ஜில்லாவில் இந்துபுரத்திற்கு 9 மைலுக்குக் கிழக்கில் "லேபாக்ஷி" என்ற ஸ்தலம் இருக்கிறது. இந்தஸ்தலம் இப்பொழுது நிலைமை குன்றியிருப்பினும், முற்காலத்தில் விசேடமான செல்வத்தையும், சிறப்பையும் பெற்றிருந்தது. இதற்குப் போதிய ஆதாரமும்இருக்கிறது.

பெயர்க்காரணம்.

இந்தஸ்தலத்தின் பெயர்க்காரணத்தை ஆராய்ந்து பார்த்ததில் அடியில்வருமாறு செய்திவெளிப்படுகிறது. அதாவது—ஸ்ரீராமபிரான்வனவாசகாலத்தில் சீதையைப்பிரிந்து மாயமானைத்தேடிக் கொண்டுஇங்கு நின்றபோது இராவணன் சீதாதேவியை இலங்கைக்கு எடுத்துச்சென்றான் என்றசெய்தியை முதல் முதல் 'ஜடாயு' என்ற கழுகரசனால் சொல்லக் கேட்டதாகவும், அஜ்ஜடாயு தன்முழுபலத்தையும் காட்டிச்சீதையை மீட்க மிகமுயன்றும் முடியாமல் இராவணனது உடைவாளால் சிறகிழந்து நிலத்தில்வீழ்ந்து மூர்ச்சிக்க அப்போது அங்குவந்த ஸ்ரீராமன் ஜடாயுவின் நிலைமைக்குவருந்தி மூர்ச்சை தெளிவித்து "எழுந்திரு பக்ஷியே" என்றுவிளிக்க, அச்சொல்லே இந்தஸ்தலத்திற்குப் பெயராய் "லேபக்ஷி" என்று வழங்கப்பட்டதென்பதே. லே என்றால் தெலுங்குபாஷையில் 'எழு' என்று பொருள். பக்ஷி—என்றால் பறவை என்றுபொருள் இவ்விரண்டு சொற்களையும் கூட்டினால் 'எழுந்திருபக்ஷியே' என்றுபொருளாகிறது. இக்காரணப் பெயரே இந்தஸ்தலத்திற்குப் பெயராய் அமைந்து பழையவரலாற்றை ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறது.

இவ்வுண்மை எவ்வாறாயினும், லேபாக்ஷிஸ்தலம் வாலாற்று வகையில் பிரசித்தி பெற்றிருந்ததென்பது மறுக்கமுடியாதவுண்மை.

பழமை

கி. பி. 1337 ஆம் ஆண்டில் வித்தியாரண்யரால் ஸ்தாபிக்கப்பட்டவிஜயநகர சாம்ராஜ்யத்தில் லேபாக்ஷி பிரசித்திபெற்றிருந்தது.

பாமினி அரசர்களும் விஜயநகர சாம்ராஜ்யாதிபதிகளும் ஒருவருக்கொருவர்விரோதபாவனையில் இருந்து வந்ததனல் விஜயநகர அரசர்கள் தமது அதிகாரத்திற்குட்பட்ட அதிமுக்கியமான விடங்களில் வலிய அரணமைந்தகோட்டைகளை நிர்மாணித்து அவைகளில் சேனைகளை எப்பொழுதும் யுத்த சன்னத்தராயிருக்கும்படி அமர்த்தியிருந்தனர். அத்தகையகோட்டைகளில் "கனககிரி" என்பது ஒன்று. இப்பொழுது இதனைப்பெனுகொண்டா' என்று கூறுகின்றனர்- விஜயநகரஅரசர்களில் பிரசித்திபெற்ற ஸ்ரீகிருஷ்ணதேவராயர் இந்தஸ்தலத்தில் வசித்துவந்தனர்.

மந்திரிவிருப்பண்ணாகண்ணிழந்தது.

அப்பொழுது விஜயநகரத்தில் பொக்கிஷ மந்திரியாக விளங்கியவிருப்பண்ணா என்பவர் தம்மைப்போலொத்த ஒருசிலையை செய்வித்து அதனை ஞாபகார்த்தமாய் பெரியதொரு புதிய ஆலயத்தில் ஒருபக்கம் பிரதிஷ்டைசெய்விப்பதெனத் தீர்மானித்து அரசனது அநுமதிபெருமலே பொக்கிஷத்தினின்றும் பெருந்தொகையை எடுத்துவேலைகளை விரைவில் செய்துமுடித்தார். அவ்வாலயத்தில் தமது உருவத்தையும் பிரதிஷ்டை செய்வித்தார் இவ்விஷயம் பெனுகொண்டாவில் வசித்து வந்த அரசன் கிருஷ்ணதேவராயனுக்குத் தெரியவந்தது. பொக்கிஷமந்திரிதனது அநுமதி பெருமலே பெருந்தொகையை எடுத்துதமது இச்சைவழி செலவிட்டு சுதேச்சாதிகாரமாக நடந்து கொண்டதற்குப் பெரிதும்கோபித்து அவனது இருகண்களையும் தோண்டிவிடும்படி தனது அதிகாரிக்கு கண்டிப்பானஉத்திரவு செய்தான். அக்கொடிய உத்திரவைக் கேள்விப்பட்ட பொக்கிஷமந்திரி திடுக்கிட்டுச்சகிக்கமுடியாத மனோவேதனையிலாழ்ந்து உய்யும் வகைகாணது உத்திரவுபெற்ற ஊழியர்கள் வந்து தமது கண்களைக்களைந்து அவமானப்படுத்துமுன்னரே தாமே தமதுகைப்பட அந்தக்காரியத்தைச்செய்து முடிப்பது மேலெனதுணிவு கொண்டு தாமேதமது கண்களைக்கூரிய ஆயுதமொன்ருல் குத்திக்கொண்டு அந்த கனுனர். ஆஹா! என்ன துன்பம்.

காண்போர்கண்களுக்கு நல்விருந்தூட்டவல்ல வெகு விசித்திர வேலைப்பாடுகளும், சிற்பநுட்பங்களும் அபரிமித மாகச் செறிந்து அழகாகவிளங்கும் திவ்யாலங்கார கலியாணமண்டபத்தை திறம்பெறச்செய்வித்த விருப்பண்ணரது அரியபக்திக்குப் பிரதிபலன் கண்ணிழந்து வருந்துவதுதானே? அந்தோ! கொடுமை! கொடுமை!

கொடுமையின் ஞாபகம்.

அக்கலியாணமண்டபத்தின் ஓரிடத்தில் ஒருகற்றூணில் இரண்டு கருப்புள்ளிகள் வெட்டப்பட்டுள்ளன அவைவிருப்பண்ணரது கண்களினின்றும் வடிந்தரத்தத்துளிகளின் ஞாபகச்சின்னம் என்று அங்குளளார் கூறுகின்றார்கள். அதுஎங்ஙனமாயிலும்' இத்துக்கச் செய்தியைப் படிப்பவர்களும், கேட்பவர்களும் துக்கத்திற்காற்றாது கண்ணீர் வடித்தேதீருவர். அந்தோ! நல்லோருக்கு இத்தீவினையை எய்துவிப்பதாம்பனது திருவுளமாயின் விதியின் விசித்திரத்தையாரே அறிய வல்லார்?

ஆலயத்தின் பெயர்.

விருப்பண்ணர் கட்டுவித்த கோயிலுக்குப் பெயர்—வீரபத்திரத்தேவாலயம்இதுமிகவும் அழகுவாய்ந்தது. விஜயநகர சாம்ராஜ்யம் வெகு சிறப்பாக விருந்தகாலத்துவிளங்கிய அற்புத சிற்பக்கலைகளின் திட்பநுட்பங்கள் இன்னும்அந்நிலைமாறாதுஅபூர்வகாட்சியாய்பெருமையுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

கலியாணமண்டபம்.

அலங்காரமிகுந்த வீரபத்திரசாமிகோவிலின் கலியாணமண்டபம் ஆயிரக்கணக்கானயாத்திரீகர்களின் கவனத்தைக்கவரும் திறமைவாய்ந்தது காண்போர்கண் விருந்தாய் விளங்கும் அபூர்வ சிற்பங்களில் ஆச்சரியத்திறமையை என்னென்றியம்புவது? இம்மகாமண்டபத்தை அந்தமிகுந்த 66கற்றூண்கள் வரிசைபெறநின்று அழகுபடுத்திக்கொண்டிருக்கின்றன. அவைகளில் இரண்டு தூண்கள்மட்டுமே மண்மேட்டில்மறைந்துள்ளன. மிஞ்சிய64தூண்களும் யாதோர் பின்னமின்றி நன்றாகவிளங்கிக்கொண்டிருக்கின்றன. நவீனசாஸ்திரஆராய்ச்சிவல்லார் இச்சித்திரத் தூண்களின்ஓவியஅமைப்புகளைக் காண்பார்களாயின் தங்கள் மூக்கின்நுனியில்சுட்டுவிரலைவைத்து வியவாதொழியார்கள். மண்டபத்தின் கற்சுவர்களில் பற்பலவிதமான கண்கவர்சித்திரங்கள் அந்தமும் விந்தையுமாகச் சிற்றுளியின் திறம்பெறச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சங்கீதக்கருவிகளைக் கைகளில் ஏந்திக்கொண்டு அத்தொழிலின் பாண்டித்தியத்தை விளக்கும் பாவனையிலுள்ள சித்திரங்களும் பாடகர்பாட்டிசைக்கும் பாவனைபலவமைந்த பொம்மைகளும்பாரதராமாயணகாவியங்களின் சாரத்தைக்காட்டும் சிலைகளுமே மிகுதியானவை: இவைகள்யாவும் கண்பெற்றார் கண்டுகளிக்கத்தக்க காட்சிவாய்

ந்தவை இவைபற்றி மண்டபத்தின் நடுவில் எப்பக்கத்திலிருந்து பார்ப்பினும், பார்ப்போரையே நோக்கும் பாவனையில் நிர்மிக்கப்பட்ட விசித்திரப் பிரதிமை யொன்று வைக்கப்பட்டிருப்பது காண்போர் கண்ணையும், கவனத்தையும் மேலும் கவர்வதாயுள்ளது.

நந்தி விக்கிரகம்.

வீரபத்திர சுவாமியின் எதிரில் அமர்ந்திருக்கும் நந்தி உருவம், மிகப் பெரியது தமிழ்நாட்டுத் தஞ்சாவூரிலும், மைசூர் தேசத்து சாமுண்டி மலையின் மீதும், காணப்படும் நந்தி உருவங்களில் இது உயரத்திலும், பெருமனிலும், அழகிலும், சிற்பத்திலும்' அமைப்பிலும் குறைந்ததாயில்லை. இதன் உயரம் 15 அடியும், அகலம் 27 அடியும் இருக்கின்றது. அதாவது முன்னூள் உயரம் இவ்வளவு பெரிய உருவத்தை ஒறே கல்லில் சிற்ப முறைக்கேற்ப சித்தரிப்பதற்கு எவ்வளவு பெரிய முயற்சியும், பொருட் சிலவும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதை அன்பர்கள் ஆராய்ந்தறியவிடுக்கின்றோம். என்னே! ஆந்திர அரசர்களின் அபூர்வ சிற்பங்களின் ஆதரணை.

ஸ்ரீகிருஷ்ணதேவராயன் ஆட்சிக்காலத்தில் அவனது அதிகாரத்திற்குட்பட்ட சிறிய கிராமம் ஒன்றில் சிற்பக்காட்சி இவ்வளவு சிறப்புடையதாக விருக்குமானல், பெரிய நாடும், தேசமும்போன்ற இடங்களில் சிறந்துவிளங்கும் சிற்பங்கள் எவ்வளவு உயர்வும், உன்னதமும் உடையதாயிருக்கவேண்டும்.

மனம் போலிருக்கும் மாங்கல்யம்.

திரு. பி. ஸ்ரீ. அவர்கள்.

(160-வது பக்கத் தொடர்ச்சி.)

11. தீய நாசகுணங்கள் ஒழிந்து அன்புக்குணங்கள் பெருகுவதால் மனேவசிய சாஸ்திரியின் உள்ளத்தில் உண்மையொளியும், முகத்தில் விவேக வைராக்கிய ஒளியும் பொங்கித் ததும்புவதை, அவனை அணுகும் மக்கள் உணர்ந்து கௌரவிப்பர்.

12. ஜயகாந்த சக்திபெற்று விளங்கும் மனேவசிய சாஸ்திரி, செருக்கற்ற தன்னம்பிக்கையில் ஓங்கி நிற்பான். மற்றவர் எப்போதும் வழிப்பட்டு வழிவிட்டு நிற்பர்.

13. மனேவசிய சாஸ்திரிக்குப் பலவேறு சக்திகளும் சித்திகளும் பெருகும். கண்ணுல், நாவினுல், தோற்றத்தால், மற்றவரை

வசீகரித்து வழிப்படுத்தும் வசிய சக்திவாய்ந்த நிபுணன், நெப்போலியன், சிவாஜிபோன்ற பெருவீரனுகலாம்; மகாயோகியாகலாம்; சித்தனுகலாம்; பக்தனுகலாம்; தபோதனனுகலாம்; மகாபண்டிதனுகலாம்; காயமே கோயிலாகக்கலந்திருக்கும் தெய்வ ஒளிகண்டு இந்த ஜன்மத்திலே விடுதலைபெற்று ஜீவன் முக்தனுகவிளங்கலாம்.

சில ஆரம்ப விதிகள்.

1. 'சுவரை வைத்துக்கொண்டு சித்திரம் எழுதுதல் வேண்டும்' -என்பது சாதாரணமான ஓர் பழமொழி. இதனை மனேவசிய சாதகன் கவனித்து ஒழுகுதல் வேண்டும். உடம்பை வைத்துக்கொண்டுதான் மனேவசிய சாதனங்களில் பழகுதல்வேண்டும். தன்உடம்பைவைத்துக்கொண்டுதான் மனேவசியசாதனங்களில்பழகுதல்வேண்டும்உடம்பிலே ஆரோக்கியம் பெருதவன் பிறருக்கு எவ்வாறு ஆரோக்கியம் அளித்தல் கூடும்? பிறரை எவ்வாறு மகிழ்வித்தல் கூடும்? பிறரை எவ்வாறு வசீகரித்தல் கூடும்? ஆரோக்கியத்திற்கு மன ஆரோக்கியமும் மனவலிமைக்கு உடல் வளமும் அவசியமாகும் எனினும் முக்கியமாக, ஆரோக்கிய மான மனம் என்று அடிப்படையை, மானஸசாஸ்திர மாணுக்கன் முதலாவது அமைத்துக்கொண்டு, அவ் அடிப்படையின் மீது ஆரோக்கிய உடம்பு என்னும் மாளிகையை அமைத்துக்கொள்ள விரும்புகிருன். ஆரோக்கியம் என்பது உள்ளத்தின் ஆழத்திலே வேரூன்றி வளர்ந்து, தளிரோடி இலைவீசி, உடம்பில் படர்தல் வேண்டும் என்பது மனேவசிய நூலார் கொள்கை.

2. சுத்த மனமாகிய ஆரோக்கிய உள்ளத்திற்கு அடுத்தபடியாக வேண்டுவது ஆரிய வெளிச்சம். கூடுமானவரை உடம்பு ஆரிய ஒளியில் மூழ்குதல் வேண்டும். இதனை நாம் 'சூரிய ஸ்நானம்'என்று கூறுவோம்.

3. சூரிய ஒளிக்கு அடுத்தபடியாக வேண்டியது சுத்த ஆகாயம். சுத்தமான காற்றையே சுவாசித்தல் வேண்டும். சுத்த ஆகாயமுள்ள வெட்ட வெளியில் தேகமுயற்சி செய்தல்வேண்டும்.

4. சுத்தமான காற்றுக்கு அடுத்தது சுத்த ஜலம்சுத்தஜலத்தைப் பருகுதல் வேண்டும், சுத்த ஜலத்தில் நீராடுதல் வேண்டும்.

5. பிறகு, சுத்த உணவு. காயும் கிழங்கும் கனிகளும் தூய உணவு எனப்படும். இவ்வுணவு வகைகளே சத்துவ குணத்தை விருத்திசெய்யும் நல்லுணவாகும். இவற்றையும் பாலையும் 'விடமென்' என்னும் இயற்கையான 'ஜீவசத்து'ள்ள உணவுவகைகளையும் மிதமாக உட்கொள்ளுதல் வேண்டும். உணவை நன்முக மென்று புசித்தல் வேண்டும். உண்ணும் உணவைச் சிறிது சிறிதாகச் சுவைத்து உண்ணுவதைப் போல், பருகும் நீரையும் பாலையும் சிறிது சிறிதாகச் சுவைத்துப் பருதகுல் வேண்டும். இவ்வாறு சுவைத்து உட்கொள்வதால், உண

வும் பானமும் உமிழ் நீரோடு நன்ருகக் கலந்து எழிதில் ஜீரணமாகும். போதை அல்லது மயக்கம் தரும் கஞ்சா, கள் முதலானவற்றை உட்கொள்ளுதல் மனோசக்தியை கெடுத்துவிடும்.

6. போதுமான தேக முயற்சி அல்லது உழைப்போடு, இளைப்பாறுதலும் விடுமுறை எடுத்துக்கொள்ளுதலும் ஏதாவதொரு உற்சாகமான விளையாட்டில் சிறிது பொழுது போக்குதலும் அவசியமானவை.

7. ஆரோக்கிய விதிகளான இவ் ஆறு பொது விதிகளோடு, மனோவசிய சாதகனுகிய மாணுக்கன் கவனிக்கவேண்டிய ஆறு சிறப்பு விதிகளுமுண்டு.

சிறப்பு விதிகள்.

1. உடம்பின் அங்கங்களை வீணுக ஆசைத்துக்கொண்டிருப்பது, மனோவசிய சக்தியை ஒருவாறு குறைப்பதாகும்' எனவே உடம்பை அமைதியாக வைத்துக்கொள்ளப் பழகுதல் வேண்டும்.

2. இவ்வண்ணமே உள்ளத்தில் அனுவசியமான அலைகளை உண்டுபண்ணும் கவலை அச்சம் கோபம் ஆதியனவும் மனோவசிய சக்தியைக் குறைப்பனவாகும். எனவே, கூடுமானவரை மன அமைதியும் வேண்டும் உள்ளத்திலும் உடம்பிலும் அமைதியோடு, எழுதிவைத்த சித்திரம் போல் ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது வீற்றிருக்கப் பழகுதல் வேண்டும். 'எழுது சித்திரம்' என்னும் உபமானத்தை நன்ருக நினைத்துக்கொள்.

3. மனோவசிய சாதகன் அவசியமானபோது பிறருக்கு யோசனை சொல்லி அவர்களைத் தன் விருப்பத்திற்கிணங்க நடத்திப் பழகுதல் வேண்டும்.

4. கூடுமானவரை, மனோவசிய சாஸ்திரி இயற்கையோடு இசைந்த வாழ்வு வாழப் பழகுதல் வேண்டும். இயற்கையோடு இசைந்த இன்ப வாழ்வே, மானஸசாஸ்திரி விரும்பிவாழும் தெய்விக வாழ்வாகும்.

5. இயற்கையின் சட்டங்களுக்கும் நியமங்களுக்கும் உட்பட்டே, மானஸ சாஸ்திர அற்புதங்களெல்லாம் நடைபெறுகின்றன என்பது மானஸ சாஸ்திரிகளின் தேர்ந்த நம்பிக்கை.

6. 'அன்பே கடவுள்' என்பது மனோவசிய சாஸ்திரியின் மதம். அறிவுக் கடவுளைப் பற்றி நாம் அறியோம்; அன்புக் கடவுளையே அறிவோம்—என்று மனோவசிய சாஸ்திரம் சொல்லுகிறது. உலகமெலாம் ஓர் உயிராகத் தழுவிநிற்கும் தாயாகிய தெய்வம், அன்புமயமாகவே காட்சி தருகிறது.

கனவல்லி

அல்லது

கள்வர் கவர்ந்த கன்னிகை.

(அச்சுரிமை பெற்றது)

கோவை திரு. சி. கு. நாரயணஸாமி முதலியார் அவர்கள்.

(80-வது பக்கத் தொடர்ச்சி.)

பொன்னம்மாள் பெற்றோர் சுத்த வைதீக குடும்பத்தினராகலாலும், பழைய பழக்க வழக்கங்களில் மிகுந்த பற்றுள்ளவர்களாதலாலும், நவீன நாகரீகக் கொள்கைகளில் ஒரு சிறிது கைப்பற்றினும், அது பெருங்கேட்டுக்கு ஏதுவாம் என்ற கொள்கையும், பந்துக்கள் பலமாக ஆட்சேபித்துக் கூக்குரல் இடுவார்களென்ற பயமும் உடையவர்களானதாலும் பொன்னம்மாளுக்குப் பதிவுப்படி பதினேழாவது நாளிலேயே மைபோற் கருத்து மிருதுவான அழகிய அவளது கூந்தலைக் களைந்துவிட வேண்டுமென்ற ஏற்பாட்டுடன் இருந்தனர். இதனையறிந்த கைம்பெண்ணாகிய பொன்னம்மாள் தனது உயிரினும் உயர்வாக மதித்து, நன்றாகப் போற்றிப் பாதுகாத்து வளர்த்துக் கணுக்காலளவும் வீழ்ந்து ஒயிலாகப்புரளுகின்ற நீண்ட கேசத்தை அநியாயமாக இழக்கவும், ஆண்டவன் அன்பால் அருளப்பெற்ற நல்லெழிலையும், நவயௌவனத்தையும் அவமாக்கவும், தான் எதிர்வருவதும் கண்ணெதிர்ப்படுதலும் அபசகுனம் என்று பிறர் எண்ணவும், வெறுத்துக்கூறவும், நான் அவ்வபவாதத்திற்கஞ்சி ஓர் மூலை வீட்டில் தனித்து ஒருபுறத்திருந்து அல்லும் பகலும் தனது தீன நிலைமைக்கிரங்கி வருந்தவும் உள்ளாகக் கூடாதென்று தன்னுள் உறுதியாகத் தீர்மானித்துக் கொண்டனள். ஆனால், இத்தகைய தனது தீர்மானத்திற்கு, மூடநம்பிக்கையையுடைய தனது பெற்றோர்களும், நெருங்கிய உறவினரும் உடன்படமாட்டார்களே என்று ஏங்கினர். இவற்றினின்றும் தப்புவதற்குரிய உபாயம் யாது? தப்பியபின் மேற்கொண்டு செய்ய

வேண்டிய தென்ன? தனது ஜீவிய காலம் பிறர் தூற்றலுக்கும், பழிப்புக்கும் இலக்காகாதிருப்பதற்கு எவ்வாறுநடந்துகொள்வது? என்பது முதலிய யோசனைகளை மேலும் செய்யலானாள். தனது இளமையிலேயே கல்வியிலும், ஒழுக்கத்திலும், தெய்வசிந்தனையிலும், ஆசாரசீர்திருத்தத்திலும், பொன்னம்மாளுக்கு அதிகவிருப்பம். அவைகளை நாளடைவில் வளர்த்து அதன் கொள்கைகளில் உயர்ந்திருந்ததனால் நிதானமாய் ஆலோசித்து ஒருவாறு முடிவுக்கு வந்தனள். அது அடியில் வருமாறு:—'தனதுகல்வி, அறிவு, அன்பு, எண்ணம் முதலியவைகட்கு முழுதும் ஒத்தும்; நற்குணம், நாகரீகங்களில் உயர்ந்தும் ஜாதிக்கட்டுப்பாடு, மூடாசாரக் கண்மூடி வழக்கங்களில் வெறுப்பும்; விதவாவிவாக விருப்பும்; இளம் கைம்பெண்கள் முன்னேற்றத்தை ஆதரித்து நிற்கும் கூட்டத்தைச் சார்ந்திருத்தலும், ஆசார சீர்திருத்த முறையைக் கைக்கொள்ளுதலுமாகிய அழகிய ஒரு ஆடவன், தன்னை விரும்பி மணம்புரியும் வரை, தான் தன் ஒழுக்கநிலையினின்றும் ஒரு சிறிதும் மாறுபடாமல் உறுதியுடன் இருப்பதென்றும், இவ்வுறுதியை நல்லபடி வளர்ப்பதற்குப்போதிய பாதுகாப்புத்தலம், ஓரங்கலிலுள்ள தனது தாய்மாமன் நீலகண்ட சாஸ்திரியார் வீடே என்றும், தான் அங்கு சென்று தனது கருத்தை அவர்க்கெடுத்துரைத்து அவர் சம்மதி பெற்று அவரது ஆதரவில் இருப்பதே முடிவு என்றும் தீர்மானிக்கப்பட்டதே.'

இங்ஙனம் தீர்மானிக்கப்பட்ட தனது எண்ணத்தை நிறைவேற்றுதற்கு உற்றதுணை யொன்று வேண்டும். அத் துணை வயது வந்த கிழவியாயிருத்தல் வேண்டும், அவள் தன் கருத்துக்கும், கட்டளைக்கும் ஒரு சிறிதும் மாறுபாடின்றி கீழ்படிந்து நடக்கக் கூடியவளாயிருத்தல் வேண்டும். இதற்கென் செய்வது? என்று எங்கினள்? இறுதியாக தனது வீட்டில் நெடுநாளாக வேலை செய்து வருபவளும், தன்னை இளமையிலிருந்தே வளர்த்து தன்மீது பேரன்புடையவளுமான 'சீதாலட்சுமி'யே தனது கருத்துக்குப் பொருந்தியவள் என்று உறுதி செய்துகொண்டு யாருமில்லாத சமயத்தில் தனது எண்ணத்தை அறிவித்து அவளை சம்மதிக்கச் செய்தனள். கணவன் இறந்த பதினாறும் நாளிரவு முன்னமே வழிச் செலவு முதலியவைகட்குத் தயார்செய்து வைத்திருந்த தனது பொருள் புடவைகளுடன் வீட்டிலுள்ளார் அயர்ந்து தூங்குகின்ற

சமயத்தில், சீதாலெட்சுமியுடன் பிரயாணப்பட்டு ஊருக்கு வெளியிலுள்ள சத்திரத்தில் விடியமட்டும் இருவரும் தங்கியிருந்து விடிந்து புறப்படுகிற தபால்வண்டியில் ஏறி ஓரங்கலுக்குச்சென்றனர். வழியில் யாதோர் இன்னலுக்கும் உள்ளாகாமல் மாலை 6 மணிக்கு ஓரங்கலில் வண்டிவிட்டிறங்கி தனது மாமனார் வீடு சேர்ந்தனர். அவர் தனது மருமகள் எதிர்பாராத அதிசய வரவுக்கு வியந்தும், அவளது துக்கநிலையையும் தோற்றத்தையுங்கண்டும் மிகவும் வருந்தி, காரணத்தை மெதுவாக விசாரிப்போம் என்றெண்ணி முதலில், அவளது வழிப்பிரயாணத்தின் களைப்புத்தீர ஸ்நானபானங்களைச் செய்வித்து உண்டியளித்து இளைப்பாறியவுடன், தன் மருமகளை அருகிருத்திக்கொண்டு, நாளை உனது கணவனது கருமாதி காரியமாயிருக்க, நீ இங்கு தனித்துவரக் காரணமென்ன? உனக்குற்ற அத்தகைய கொடுந்துன்பம் யாது? எனது தமக்கையும், மைத்துனரும் சுகமாயிருக்கிறார்களா? உண்மையை என்னிடம் தாராளமாய்ச் சொல்லவும் என்று கேட்டனர். தனது மாமனார் நீலகண்ட சாஸ்திரி பெரும் படிப்பாளி அல்லவெனினும், ஆசார சீர்திருத்த முயற்சி, விதவாவிவாகத்தைஆதரித்தல், முதலியவைகளில் நிரம்பப் பற்றுள்ளவரானதால், அவரிடம் தனதுஉண்மையை உரைத்து அவரது அபிமானத்தையும், ஆதரவையும் பெறவேண்டும் என்று பொன்னம்மாள் எண்ணிவந்தவளானதால், தனது மனக்கருத்தைத் தாராளமாய் வெளியிட்டுத் தஞ்சமென்றும் புகலிடமாய்ச் சரணாகதியென்றும் நம்பிவந்த என்னை, தாங்கள் வெறுக்காமல் ஆதரவுகாட்டி ஆட்கொள்ள வேண்டுமென்று வேண்டினள். நீலகண்ட சாஸ்திரி இயல்பாகவே எழைக்கிரங்கும் சுபாவமும், அடைக்கலம் என்று வந்து தன்னைஅடைந்தாரை ஆதரிக்கும் குணமும், இளகிய மனமும் உடையவரானதால், பொன்னம்மாள் கூறிய விஷயங்களைக் கேட்டு அஞ்சவேண்டாம். நான் உன்னை ஆதரிக்கிறேன் என்று ஆறுதல் கூறினன். பொன்னம்மாள் சமாதானம் அடைந்து தனது அத்தை அம்மாளிடம் சென்று சயனித்துக் கொண்டனள். இது நிற்க,

கோலகொண்டாவில் பொன்னம்மாளது கணவன் வீட்டில் அவளது தாய் தந்தையர்களும், கணவனது பந்துகளும் உறவினரும், யாது செய்கின்றனர் என்பதைக் கவனிப்போம். பதினொருவது

நாள் காலை தொடங்கி கருமாதி காரியங்கட்குச் சாமான்கள் சேகரிப்பதிலும் தானம் செய்வதற்குரிய வஸ்துக்களை வாங்குவதிலும் பிராம்மண போசனத்திற்கு ஏற்பாடு செய்வதிலுமே கண்ணுங் கருத்துமாயிருந்ததனுல் பொன்னம்மாளைப்பற்றி அவர்கள் கவனிக்கவேயில்லை. பதினேழாவது நாள் காலையில் பொன்னம்மாளுக்கு மங்கலநாண் களைந்து தலைமயிரை மழுங்கச் சிறைத்து மொட்டை யடித்து அவளை அலங்கோலப்படுத்தி ஆருத துக்கத்தில் ஆழ்த்தவும், சுயநலமே கண்ணுகவுடைய வைதிகப் புரோகிதர் மூட ஆசாரமென்னும் பாழுஞ் சடங்கை நடாத்திப்பணம் பறிக்கவும் பொன்னம்மாளைத் தேடினர். அவள் வழக்கமாகச் சயனிக்கும் படுக்கை அறையிலும், அந்தப்புரத்திலும் காணப்படவில்லை. கொல்லையைப் பரிசோதித்தனர். அக்கம் பக்கம் விசாரித்தனர். அகப்படவில்லை. பலவிடத்தும் ஆய்ந்து தேடி ஓய்ந்த பின்னர், யாவரும் அதிசயித்து அவள் இங்ஙனம் மாயமாய் மறைந்ததற்கு காரணங் காணுது திகைத்தனர். இதற்குள் விஷயம் காட்டுத்தீபோல் பரவி அவரவர்க்குத்தோன்றியபடி எல்லாம்பேசினர்.உலகம்என்றும் உண்மையுணர்ந்து பேசுவது அரிதன்றே? இங்ஙனம் பொன்னம்மாள் மீது அபாண்டப் பழிசுமத்தி அவள் தகாத விதமாய் நடந்து சென்றுளென்று அக்கம் பக்கம் அலர் தூற்றிப் பேசுவதை பெற்றோரும், உறவினருங் கேட்டு இன்னது செய்வதெனத்தோன்றுது மனம் புழுங்கினர். உண்மையறியாத உலகத்தின் அதிசயச் செயலை நிந்தித்தனர். அன்று முழுதும் பொன்னம்மாளைப்பற்றிப் பேற்றோரும், பந்துக்களும் பேசியும் மனம் நொந்தும், வாய்விட்டுப் புலம்பியும் ஓய்ந்தனர். இது நிற்க,

ஓரங்கல் நீலகண்டசாஸ்திரி ஏழைக்குடும்பத்தினர். சமையல் செய்வதில் தேர்ந்த அனுபவம் வாய்ந்த பரிசாரகன். அதனுல் போதிய வருமானம் வந்துகொண்டிருந்தது. தனக்கு ஓய்வு கிடைத்த போதெல்லாம் தனக்குத் தெரிந்த சமையல் முறைகளை பொன்னம்மாளுக்குச் சொல்லிப் பயிற்சி செய்வித்து வந்தான். நுண்ணறிவு வாய்ந்த பொன்னம்மாள் அவைகளில் நல்ல பயிற்சி பெற்று சமைப்பதில் தனது மாமனுரினும் ஒருபடி உயர்ந்தனள்.

தமிழ்நாட்டுப் பலசாலிகள் மகாநாடு.

திருவாளர். பெரி. சோமசுந்தரன் அவர்கள் காரியதரிசி.

கீழச்சிவற்பட்டி—அழகாபுரி உடற்பயிற்சி சாலையின் சார்பாக புரட்டாசி உசு, உசு (அக்டோபர் 11, 12, 1930) சனி ஞாயிறுகளில் கூடுகிறது.

இம்மகாநாட்டில் தமிழ்நாடு கக-ஜில்லாவிலுமுள்ளோர் போட்டியில் கலந்துகொள்வார்கள்.

ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.

கான்பஹதூர் டாக்டர் சையத்தாஜுடீன் (எம். எல். ஸி.) அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

போட்டிகளைப் பரீட்சை செய்யும் ஜட்ஜிகள்.

(1) கனம் T. S. ஷெட்டி (S. A. Hospital) மெடிகல் ஆபீஸர் காரைக்குடி.

(2) ,, டாக்டர் S. சுப்பிரமணியம், எம். பி. சி. எம். காரைக்குடி

(3) ,, ரெவரெண்ட் ஜே. பேரம், பிரின்ஸிபால், சி. எம். எஸ். ஹைஸ்கூல் புதுக்கோட்டை.

(4) ,, S. T. ரெய்னீஸ் பிள்ளை, போலீஸ் கமிஷனர், புதுக்கோட்டை.

(5) ,, கான்பகதூர் டாக்டர் சையத்தாஜுடீன் (தலைவர்)

வெற்றி பெற்றோர்க்கு வெள்ளிக்கிண்ணம், தங்கம்பதக்கம், வெள்ளிப் பதக்கம் முதலிய பரிசுகள் வழங்கப்பெறும்.

மகாநாட்டின் காக்ஷிகாண விரும்புவோர்க்கு இடமுள்ளவரை இலவசமாகப் பிரவேசச் சீட்டுகள் தரப்படும்.

உடல்வளம், உடற்கட்டு, உடல்வன்மை, முதலிய போட்டிகள் நிகழும்.

போதியசாவகாசமிருந்தால் குஸ்திகளும் நடக்கும்.

குறிப்பு:—ஷை மகாநாட்டை தமிழ்நாட்டார் யாவரும் ஆதரித்துச் சிறப்புடன் நடத்தி வைத்து தமிழர்களை திடகாத்திரர்களாக்க வழி தேடும்படி யாவரையும் வேண்டிக்கொள்ளுகிறோம். (ப—ர்.)

வனிதா ரத்னம்

அல்லது

மாசற்ற மாமணி.

திரு. ச. தா. பாலையா பிள்ளை அவர்கள்.

முதல் அத்தியாயம்.

அழகு என்பது ஓர் மாசற்ற தெய்வீக வரப்ரசாதமாகும். யாண்டு அழகில்லையோ அங்கு ஓர்வித அபூர்வ இன்பம் ஜெனிப்பது கூடாதகாரியமாம். வேணு, அந்நங்கை சிறுபருவத்தினளே யாயினும், ஆஹா! சுடர்விட்டொளிர்கின்ற கண்களும், அழகினை ஓர் உருவமெனத் திரட்டி இலங்கும் நாசியும், பவளம்போன்ற திரண்டுருண்ட கன்னங்களும், இவ்வெவற்றிற்கும் மேலாக தீட்சண்யத்தைக் காட்டா நிற்கும் ஓர் நெற்றியும், சின்னஇடையும், மின்னல் உடையும், அன்னநடையும், அழகிய துடையும், ஹா......வெகு ஜோபிதம்! ஜோபிதம்!! என ஏக்கத்தோடு கூடிய ஓர் பார்வையுடன் தன் நண்பன் வேணுகோபாலனிடம், தேசிங்கு என்னும் யௌவனன் சொல்வானாயினன். வேணுவோ, ஒன்றும் கூறுவதற்கின்றி தனது நண்பன் முகத்தினைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தானே யன்றி பதிலொன்றும் விடுத்தானில்லை. தேசங்கு மீண்டும், தன்நண்பனை நோக்கி

தேசங்கு:—வேணு, ஏன் மௌனம் சாதிக்கின்றாய். உற்ற துயர் நேரிடுங்காலை, நண்பர்கள் ஒருவரோடொருவர் அளவளாவி, தத்தம் காரியங்களைக்கூறி மனச்சாந்தியடைவது உலகியல்பு. நீயோ எனது ஆருயிர் அன்பன். எனது இன்பதுன்பங்களில் உனக்கும் பங்கு உண்டென்பதை யாரும் மறக்கமுடியாது. ஆகையால் எனக்கு ஆறுதலாக வேணும் ஓர் வார்த்தை கூறலாகாதோ?

வேணு:—அன்ப,நீகூறியவைகள் யாவும்நியாயமானவைகளே அவைகளை மறுத்துகூற என்னால் இயலுமா? ஆனால் எனது மன மெல்லாம் வேறிடம் சென்றுவிட்டதால் நீ சொன்ன வாசகங்கள் மாத்திரம் என் செவிகளில் விழுந்தனவேயன்றி, அதற்குப் பதில் கூறமுடியாது இருந்துவிட்டேன். உனது இன்ப துன்பங்களில் எனக்கும் பங்குண்டென நீ கூறியது முற்றிலும் உண்மையே யாகும். என்றாலும் நீ இப்போது மனதில் கொண்டுள்ள துன்பத்தை நீக்க நானேவல்லவன்? உனது எண்ணமே வேறுவிதமாக வுள்ளது. இவைகட்குத் தெய்வ சங்கற்பம் இருந்தாலன்றி மனிதப் பிரயத்தனத்தில் நடவா. இத்துடன் நீயும் நானும் எவ்வாறு மாணவர் என்னும் நிலைமையிலிருக்கின்றோமோ, இதேபோல் நீ கூறும் அச்சிறுமியும் மாணவியாகவே இருக்கிறாள். நம் யாவருக்குள்ளும் இந்நிலையில் உள்ள ஓர் வித்தியாசம் யாதெனில் நாமிருவரும் உயர்ந்த வகுப்புகளில் வாசிக்க, அப்பெண்மணியோ அவள் வயதிற்கேற்ப ஒன்பதாவது வகுப்பில் வாசிக்கிறாள். இவ்வளவிலும், நமக்கும் அவளுக்கும் மதவொற்றுமை ஒன்று தவிர எனைய எவ்வித ஒற்றுமைகளும் இல்லை. காரியங்கள் இங்ஙனமிருக்க, உனது ஆவலோ அச்சிறுமி மீது பதிந்துநிற்கிறது. நீ அவளை விவாகம் செய்யவேண்டும். இன்றேல் இவ்வாசையை விட்டுவிட வேண்டும்.

தேசிங்கு:—விவாகமா? பேஷ்! வேணு இவ்வார்த்தையை இனி உச்சரியாதே. அவளை நான் விவாகம்செய்துகொள்ள விரும்பினாலும், என் பெற்றோர்கள் சம்மதிப்பார்களா? ஓர் வேளை அவர்கள் சம்மதிப்பினும் உற்றார் உறவினர்களின் தொந்தரவுகட்கு நாம் ஆளாகும்படி நேரிடும். இவ்வளவையும் ஓர் பக்கம் ஒதுக்கி வைத்துவிடுவதாகவே வைத்துக்கொள்வோம். அப்பெண்ணின் தாயாரும், பாட்டியும் சம்மதிப்பார்களா? இத்தகைய இடையூறுகளெல்லாம் நீங்கினாலன்றி, அப்பெண்மணியை விவாகம் செய்வதென்பது ஊமையன் கண்ட கனவாகவே முடியும்.

வேணு:—பின்னர், ஏன் உன் மனதை வீணே சஞ்சலத்துக்குள்ளாக்கிக் கொள்ளுகின்றாய்? யாவும் தெரிந்த நீயும், இவ்வாறு கிலேசப்படுவது ஆச்சரியமாகவே இருக்கின்றது. யாவும் ஈசன் செயற்படி நடக்குமென விட்டுவிடு.

தேசிங்கு:—வேணு வெகு எளிதில் வார்த்தைகளைச் சரமாரியாய்ப் பொழிந்து என்னை அடக்கிவிடுதல் நன்றன்று. உயிர் போயினும், இப்போது நான் கொண்டுள்ள ஆவலை அகற்ற முடியவே முடியாது. இதனால் என்ன கஷ்டங்கள் நேரிடினும் நேரிடுக. கஷ்டங்களும், துன்பங்களும் என்றும் நிலைகொள்வன அல்லவே. துன்பங்களுக்குப் பிறகு இன்பங்களும், கஷ்டங்கட்குப் பிறகு சுகமும் மாறிமாறி வருதல் இயல்பு. ஆனால் மனிதர்கள் தாங்கள் கொண்டுள்ள உறுதியான வழிபற்றி, பாரம் யாவையும் கடவுளின் சரணாரவிந்தங்களில் சமர்ப்பித்துவிட்டு, ஊக்கமாயும், உறுதியாயும் நின்றால் வெற்றிபெறாத காரியமும் இவ்வவனியிலுளதோ? பெரியோர் சரிதங்களென்ன, பராக்கிரமசாலிகளின் வெற்றிகளென்ன, கற்பரசிகளின் வீரப்பிரதாபங்களென்ன, வெற்றிசீலர்களின் துவஜ இதிகாசங்களென்ன, இன்னோரன்ன பலகாரியங்களையும் ஆழ்ந்து நோக்கினால் ஆங்கு வெற்றி பரிமளித்து நிற்கின்றதையும், அவர்கள் எடுத்துள்ள காரியங்கள் இறுதியில் வாகைமாலை சூட்டப் பெற்றிருப்பதையுங் காணலாம். எனவே நான் இன்னல்கண்டு அஞ்சப்போவதுமில்லை, கன்னல்மொழி கேட்டுகளிப்புறப்போவதுமில்லை. உலகில்ஒருவன் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமாயின் பிறருடை இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் பொருட்படுத்தாது இன்ப துன்பங்களைச் சரியென ஏற்று, கடைசியாக வெற்றிக் கொடி தூக்கி ஜெயகோலங்கொள்வதே வாழ்க்கையின் லக்ஷியமாகும். நண்ப, நீமாத்திரம் அவ்வப்போது எனக்கு உற்றதுணைவனாய் நின்று சிறிது உதவி செய்வாயாக. இன்றல்ல என்றேனும் ஓர் நாள் சீக்கிரம், அப்பெண்மணிக்கு இக்கரங்களினால் மாலை சூட்டி அடைவேன். இன்றேல் இவ்வாழ்க்கையைக்கேவலம் நரிகட்கும், கழுகுகட்கும் இரையாக்கிவிடுவேன். சத்தியம் என்றான். பக்கலிலிருந்த ஆலய மணியும் டாங், டாங் என ஒலித்தது.

வேணு:—தனது அரிய நண்பனின் வீராவேசம் பொருந்திய மொழிகளையும், அவனது உறுதிப்பாட்டையும், அன்னவனது காதல் பிரதிக்ஞையையும் கண்டு இறும்பூதி மெய்சிலிர்த்து நின்றான். இனி, எவ்வாற்றானும் தேசிங்கின் மனதை மாற்றவே முடியாதென்றும் முடிவுக்கு வரலானான். ஆக தனது நண்பனை நோக்கி

தேசிங்கு உனது காரியம் யாவும் வெற்றிகரமாக முடியவேண்டுமென்றே நானும் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். நான் ஆசீர்வதிப்பதற்கு முன்னதாகவே கடவுளே காட்சி கொடுத்ததுபோல் ஆலய மணியும் ஒலித்திருக்கிறது. சீக்கிரம் உன்னை தம்பதி சகிதம் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் தவிர வேறு எதுவும் என் மனதில் இப்போது தோன்றவில்லை. நண்பன் என்ற முறையில் இன்னும் ஒரே வார்த்தை கூறுகிறேன். எவ்விஷயத்திலும் இடம், பொருள், எவல் ஆகியவைகளைக் கவனித்து இடையூறுகளுக்குத் தப்புவித்து, கீர்த்தியுடன் விளங்குவாயாக. நீயோ அபாரமான திடமனதுடன் இவ்விஷயத்தில் வெளிவந்துவிட்டாயாயினும் ஞானமாயும், நியாயமாயும் நடந்துகொள்.

தேசிங்கு:—நண்ப உனது இன்னுரைகட்காவும், அரிய ஆலோசனைகட்காகவும் வந்தனம். தெய்வத்தின்மீது என் பாரங்களனைத்தையும் போட்டுவிட்டதால் என்னை நடத்தும் பொறுப்பு அப்பெருமானின் திருக்கரங்களிலேயே இருக்கின்றது. நானும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, ஆற்றல் இவைகளுக்குத் தக்கவாறு நடந்துகொள்ளுகிறேன். அன்ப இவ்வளவும் தீர்மானங்களாகி விட்டது. ஆனால் எதற்கும் ஓர் அஸ்திபாரம் வேண்டுமன்றோ? அதுதான் இன்னமும் செய்யவில்லை. அப்பெண்மணியைக் காணவேண்டும், அவள் விருப்பந்தெரியவேண்டும். பின்னரே நான் இம்முடிவுக்கு வந்திருக்கவேண்டும். என்றாலும் ஒன்றும் பிந்திப்போகவில்லை. யாவும் நன்மையாக முடியுமென்பதற்காகவே இத்தகைய யோசனைகளெல்லாம் என் மனதில் உதித்திருக்கின்றன. வேணு யாவும் சரிதான். ஒரு யோசனை கேட்கிறேன். அப்பெண்ணை எப்படிச் சந்திப்பது?

வேணு:—தேசிங்கு, இதென்ன நூதனமான கேள்வி. அப்பெண்ணின் வீட்டை விசாரித்து, நேரில் சகல விஷயங்களையும் கேட்க வேண்டியதுதான்.

தேசிங்கு:—ஹோ. அவ்வளவு எளிதான காரியமாயிருக்குமென நான் நினைக்கவில்லை. நான் அப்பெண்ணை அடிக்கடி பள்ளிக்கூடத்திற்குப் போகும்போதும், வரும்போதும், ஓரிரு தடவை ஆலய மண்டபத்திலும் சந்தித்திருக்கிறேன்.

(தொடரும்.)

நவமணி.

நமது நவமணிக்கு வருட சந்தா ரூபாய் ஒன்றே. தினம் ½ பைசாவே நாம் நமது வீட்டிற்கு வலியவரும் நவமணிக்கு உதவுகிறோம். இதுவும் இல்லாமல்ல நவமணியால் நாம் அடையக்கூடிய நன்மைகள் பல. அதற்குப் பிரதிப் பிரயோஜனமாக தினம் ½ பைசா நமது வாழ் நாளில் மீதப்படுத்தி உதவமுடியவில்லை என்றால் அது எவ்வளவு வெட்ககரமான விஷயம். இது வரை நீங்கள் ரூபாய் ஒன்று அனுப்பிப் பதிவுசெய்து கொண்டிருந்தால் சரி. இல்லையேல் உடனே அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளவேண்டுகிறோம். பழைய சந்தாதார் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதார் சேர்த்துத்தரவேண்டுகிறோம்.

விளம்பரக்காரர்களுக்கு இது ஓர் சிறந்த போக்கிஷம். என்பதை ஞாபக மூட்டுகிறோம். உடனே விளம்பரமனுப்புங்கள்.

வெளிநாட்டிலுள்ளோர் ரூபாய் ஒன்றை அனுப்பவேண்டும்.

உள்நாட்டிலுள்ளோர் ரூபாய் பன்னிரெண்டும் வெளிநாட்டிலுள்ளோர் பதினைந்தும் ஒரேகாலத்தி லனுப்பிவிட்டால் பின் அதன் ஆயுள் வரை ஒன்றையும் எதிர்பாராமலே நமது நவமணி உங்கள் வீட்டிற்கு வந்துசேரும்.

மானேஜர்

நவமணி பத்திரிகாலயம்,

P. O. PALLATUR.

உயர்ந்தவேலை! குறைந்தகூலி!!

எங்கள் அச்சுக்கூடத்தில் கல்யாணம், புதுமை, சாந்தி, திருவிழா, கும்பாபிஷேகம் முதலிய விஷேடங்களுக்கு ஒரு கலர் முதல் பல கலரில் உயர்ந்த முறையில் குறைந்த கூலியில் எல்லாவித பத்திரிகைகளும் உங்களுக்கு வேண்டிய பிளாக்குகளுடன் குறித்த காலத்தில் செய்துகொடுக்கப்படும். புதிய அச்சு சாமான்களாகையால் அச்சு சுத்தமாகவும் கண் கவர் வனப்புடனும் விளங்கும். ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

மானேஜர்

வேதாம்பாள் அச்சுக்கூடம், பள்ளத்தூர்.

எல்லா வியாதிகளுக்கும் சிறந்த மருந்து

மணிரசம் ஒன்றே!

இதன் விலை புட்டி 1க்கு	ரூ. 1—8—0
மணிதந்த சுத்திப்பொடி டப்பி 1க்கு	ரூ. 0—4—0
மணிமாத்திரை 50 கொண்டபாட்டில் 1க்கு	ரூ. 1—4—0
மணி ஓமத்திராவகம் முழுபாட்டில் 1க்கு	ரூ. 1—0—0
மேற்படி பாட்டில் 1க்கு	ரூ. 0—10—0

கிடைக்குமிடம்.

மணி ஔஷதாலயம்.

P. O. கொத்தமங்கலம்.

Printed & Published by S. RM. Ramanatha Mudaliar
at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)